(முற்பகல் 9-30)

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெலிவிஷன் வாங்குவது சம்பந்தமாக சொன்னார்கள். ஆனால், குறிப்பாக பல ஊர்களிலே வானொலிப் பெட்டிகளே இல்லாமல் இருக்கின்றன. அவ்வாறு இருந்தாலும், அவைகள் இயக்கப்படாமல் பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், அந்தக் கிராமங்களிலே உள்ள மக்கள் நல்ல செய்திகளைக் கேட்க முடியாமல் இருக்கிறார்கள். எனவே, அவ்வாறு இருக்கக்கூடிய கிராமங்களில் வானொலிப் பெட்டிகளும், 100 அல்லது 150 மைல்கள் அளவிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் டெலிவிஷன் பெட்டிகளும் வைப்பதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வானொலிப் பெட்டிகள் எந்த ஊர்களில் இயங்காமல் இருக்கின்றனவோ, அவைகள் இயங்குவதற்குரிய ரிப்பேர்களை செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த ஊர்களில் இப்படி இயங்காமல் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தொலைக்காட்சியைப் பொறுத்த அளவில், ஏற்கனவே இந்த தொலைக்காட்சி நிலையத்திலிருந்து நமக்கு கிடைத்திருக்கின்ற தகவல், சென்னையிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு நன்கு தெரியும் என்று அவர்கள் அறிவித்திருக்கின்ற காரணத்தினால், அந்த அறிவிப்பின் அடிப்படையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் 100 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்க, அவைகளை வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### தமிழகத்தில் செயல்பட்டு வரும் கோபார் கேஸ்கள்.

*வினா எண் 92. திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை கோபார் கேஸ்கள் (Gopar Gas Plant) செயல்படுகின்றன?

(ஆ) அவைகளை விரிவாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 1982-ம் ஆண்டு நவம்பர் மாத இறுதி வரை சுமார் 8084 அமைப்புகள் தமிழகத்தில் செயல்படுகின்றன.

[1983 பிப்ரவரி 1,

(ஆ) மாநில அளவில் தீவிரமாக செயல்படுத்த தனி அதிகாரிகளை அமர்த்தியும், உயர் மட்ட குழுக்களை அமைத்தும், அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி ஏ எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபர் காஸ் பிளாண்டை ஒரு வீட்டில் அமைக்க வேண்டுமென்றால், எத்தனை மாடுகளின் சாணம் அதற்குத் தேவைப்படுகிறது? இந்த கோபார் காஸ் பிளாண்டினால் லைட் எரிவதற்கு வசதி ஏற்படுமா? அது மாத்திரமல்ல: இதிலே எஸ். சி. களுக்கு மானியம் வழங்கப் படுவதாகச் சொல்லுகிறார்கள். இதர ஜாதியினருக்கும் இது வழங்கப்படுமா அதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கோபார் காஸ் பிளாண்ட் ஏற்படுத்துவதற்கு எவ்வளவு மாடு களின் சாணம் தேவைப்படுகின்றது என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஆனால், மாடு எவ்வளவு தீனி சாப்பிடுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது (சிரிப்பு). ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, இந்த கோபர் காஸ் பிளான்ட் திட்டம், 20 அம்சத் திட்டத்தில் ஒரு அங்கமாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 3,500 என்றும், இந்த ஆண்டு 5,000 செய்ய வேண்டுமென்றும் விதிமுறை இருக்கிறது. ஏற்கனவே அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டு வரப்படுகிறது.

திரு. க. ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபார் காஸ் பிளான்ட் மிகவும் பயனுள்ள தாக இருக்கிறது. இது அதிகம் செலவாகின்ற காரணத்தினால், சாதாரண மக்கள் இதைப் பயன்படுத்த முடியவில்லை. குஜராத் போன்ற மாநிலத்தில் இதை ஒரு கம்யூனிடி பிளான் டாகப் போட்டு, வீடுகளுக்கு பிரித்துக் கொடுக்கிற முறையை வைத்திருக்கிறார்கள். அது போன்ற திட்டத்தை கிராமப் புறங்களில் அமைத்து, பெரிய அளவில் அமைத்து, வீடுகளுக்கு அதைப் பயன்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே அதற்காக கொத்தனார்களுக்கெல்லாம் தனிப் பயிற்சி வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே கொடுத்து, அவர்கள் மேற்பார்வையில் இந்த கோபார் காஸ் பிளான்ட் போடப்பட்டு வருகின்றது. ஆகவே, இதை குஜராத் மாநிலத்தில் உள்ளதைப் போல் செய்யவேண்டுமென்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். ஆனால், இது மத்திய அரசாங்கத்தின் திட்டம், எனவே, மத்திய அரசாங்கத் தின் ஆலோசனையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொன்ன யோசனையையும்கண்டிப்பாக பரிசீலனை செய்யலாம்

1983 பிப்ரவரி 11]

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னபோது, இது ஒரு மத்திய அரசின் திட்டம், 20 அம்சத் திட்டம் என்று சொன்னார்கள். ஒரு பிளான்ட் அமைப்பதற்கு எவ்வளவு தொகை செலவாகிறது? அதிலே மத்திய அரசின் பங்கு என்ன? மாநில அரசின் பங்கு என்ன? என்பதை அறிவிப்பதோடு, இந்த நடப்பு ஆண்டில் எத்தனை பிளான்டுகள் போட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இது மத்திய அரசாங்கத்தின் முழுமையான திட்டம். 20 அம்சத்திட்டத்தில் ஒரு அங்கமாக இருக்கிறது. சுமார் 5,000 ரூபாய் ஒரு பிளான்ட் அமைப்பதற்குச் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவரவர்களே, இந்த 'கோபார் காஸ் பிளான்ட்' மூலம் ஒரு குடும்பத்திற்கு வேண்டிய 'காஸ்' வேண்டுமானால் அவர்கள் 4, 5 மாடுகளை வைத்து பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவர்கள் இந்த பிளான்டை நிறுவுவதற்கு செலவும் அதிகமாகிறது. ஆகவே, அரசு கொடுகின்ற மானியத்தையும் கடன் தொகையையும் அதிகப்படுத்திக்கொடுக்க உத்தேசம் இருக்கிறதா; அதற்குரிய பரிசீலனை இருக்கிறதா என்பதை அறிய, விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே அதற்குரிய வழிவகைகளை மத்திய அரசிடமிருந்துதான் நாம் பெறவேண்டியிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு தேவை என்பது அந்தக் குடும்பத்தில் இருக்கிற எண்ணிக்கையைப் பொறுத்தது. அதைப்போன்று அவர்கள் எவ்வளவு விளக்குகளை வைத்திருக்கிறார்கள், வேறு என்னென்ன சாதனங்களை வைத்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து இந்த பிளான்டின் செலவு அமைந்திருக்கும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நடமாடும் மருத்துவ வண்டிகள்.

*வினா எண். 93 திரு செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற மருத்துவ வசதிக்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நடமாடும் மருத்துவ வண்டிகள் எத்தனை?